
raisingchildren.net.au
the australian parenting website

# தீக்காயங்கள் மற்றும் தீப்புண்களுக்கான முதலுதவி


பெற்றோரின் பேணல் படங்களில்

பொருந்துவது **0-18** ஆண்டுகள்


## தீக்காயங்கள் மற்றும் தீப்புண்கள்: என்ன செய்யவேண்டும்



**தீக்காயம்** என்பது சூடான ஒன்றைத் தொடுவதால் தோலில் ஏற்படக்கூடிய காயம். **தீப்புண்** என்பது சூடான திரவங்களால் ஏற்படும் தீக்காயங்களைக் குறிக்கும்.




உங்கள் குழந்தைக்கு தீக்காயமோ தீப்புண்ணோ ஏற்பட்டால், முதலில் அந்தப் பகுதியில் உங்கள் குழந்தைக்கோ உங்களுக்கோ மேற்கொண்டு காயம் ஏற்படும் அபாயம் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். முடிந்தால் உங்கள் குழந்தையை ஒரு பத்திரமான இடத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்.




தீக்காயத்தைச் சுற்றியுள்ள ஆடை, கைக்கடிகாரம் அல்லது நகை ஏதேனும் இருந்தால் அவை தீக்காயத்தோடு ஒட்டி இருக்காத பட்சத்தில் உடனடியாக நீக்குங்கள். கொப்புளங்கள் இருந்தால் அப்படியே விட்டுவிடுங்கள்.


## தீப்புண்கள் மற்றும் தீக்காயங்கள் முதலுதவி




தீக்காயத்தை 20 நிமிடங்களுக்கு **குளிர்ந்த" ஓடும்நீரில்** வைத்திருங்கள். உங்கள் குழந்தை நிலைகுலைந்து இருந்தால் அல்லது ரொம்பக் குளிராக உணர்ந்தால், அடுத்த மூன்று மணிநேரங்களுக்கு சில நிமிடங்கள் வீதம் நீங்கள் தீக்காயத்தை குளிர்விக்கலாம்.



**தீக்காயத்தைக்"குளிர்வியுங்கள்," குழந்தையை"அல்ல.** தீக்காயம் பெரிதாக இருந்தால், 20 நிமிடங்களுக்குப் பிறகு குளிர்விப்பதை நிறுத்துங்கள். உங்கள் குழந்தையை கதகதப்பாக வைத்திருங்கள். ஏனெனில் குழந்தைகளுக்கு விரைவில் சீதளம் ஏற்பட வாய்ப்புண்டு.



தீக்காயத்தை க்ளிங் ஃபில்ம் அல்லது ஜிப் லாக் பேக் போன்ற ஒரு தளர்வான, மெல்லிய ஒட்டாத ஒன்றைக் கொண்டு டிரெஸிங் செய்யவும். வீக்கத்தையும் வலியையும் குறைக்க தீக்காயம் பட்ட கைகாலுறுப்புக்களை மேலே தூக்கி வைத்திருங்கள்.


## தீக்காயங்களுக்கும் தீப்புண்களுக்கும் மருத்துவ கவனம்




தீக்காயத்தில் பனிக்கட்டி, உறைநீர், களிம்புகள், ஈரப்படுத்திகள், எண்ணெய், நீர்க்களிம்பு, வெண்ணெய் அல்லது மாவு, குழைமம் அல்லது பொடிகளைத் **தடவ"வேண்டாம்**. இது சேதத்தை மேலும் மோசமாக்கும்.




தீக்காயம் குழந்தையின் முகத்தில், மூச்சுக்குழாயில், கைகளில் அல்லது பிறப்புறுப்பில் இருந்தாலோ அல்லது காயமானது குழந்தையின் கையைவிடப் பெரியளவில் இருந்தாலோ **அவசர"ஊர்தியை"அழையுங்கள்.**




தீக்காயமானது 20-காசு அளவுக்கு அல்லது அதைவிடப் பெரிதாக இருந்தால் அல்லது ஆழமாகவோ, கரடுமுரடாகவோ, கொப்புளங்களுடனோ இருந்தால் **மருத்துவரிடம்" அல்லது"மருத்துவமனைக்குச்"செல்லுங்கள்.** வலி தொடர்ந்தால் அல்லது கடுமையாக இருந்தால் அல்லது தீக்காயம் எந்தளவு மோசமாக இருக்கிறது என்று உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் மருத்துவரிடம் செல்லுங்கள்.

Burns and scalds first aid (Tamil) © Raising Children Network